## சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி – நகராட்சி நிர்வாகத் துறையில், தமிழ்நாடு நகராட்சிப் பொறியியல் பணியில், 2008–2009–ஆம் ஆண்டிற்கு, கண்காணிப்புப் பொறியாளராக பதவி உயர்வு – செயற்பொறியாளர்களின் தேர்ந்தோர் பட்டியல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப.3) துறை

அரசாணை (பத்தாண்டு) எண். 306 நாள்:21–07–2008

படிக்கப்பட்டது :-

நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண் 4488/2007/எப்4, நாள் 23.4.2008

---

**ஆணை:-**

நகராட்சி நிர்வாக ஆணையர் மேலே படிக்கப்பட்ட தனது கடிதத்தில், தமிழ்நாடு நகராட்சிப் பணியில், பொறியியல் பிரிவில், 2008–2009–ஆம் ஆண்டிற்கான, கண்காணிப்புப் பொறியாளர் பணியிடத்தினை பதவி உயர்வு வாயிலாக நிரப்பிட, தகுதியுடைய செயற்பொறியாளர்களின் பணியிட மதிப்பீட்டினை தயாரித்து, அதற்கு அரசின் ஒப்புதல் வேண்டி, செயற்குறிப்பு அளித்துள்ளார்.

2. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்து, நகராட்சி நிர்வாகத் துறையில், தமிழ்நாடு நகராட்சிப் பொறியியல் பணியில், 2008–2009–ஆம் ஆண்டிற்கு, கண்காணிப்புப் பொறியாளராக பதவிஉயர்வு பெறுவதற்கு கீழ்க்காணும் ஒரு நபர் அடங்கிய செயற்பொறியாளரின் பட்டியலுக்கு ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது:-

| வ. எண். | செயற்பொறியாளரின் பெயர் | தற்போது பணியாற்றும் நகராட்சி |
|---|---|---|
| 1. | திரு. கே. லஷ்மணன் | செயற்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் |

3. மேலே பத்தி இரண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட பட்டியலினை சம்பந்தப்பட்ட அலுவலருக்கு தெரிவிப்பதுடன், பட்டியலில் சேர்க்கப்படாத ஏனைய நபர்களுக்கும் தெரிவித்து அவர்கள் அதனை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை சம்பந்தப்பட்ட கோப்பில் பதிவு செய்யுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
திரு.கே. லஷ்மணன், செயற்பொறியாளர், (நகராட்சி நிர்வாக ஆணையர் வழிமுறையாக)
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை–108.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.2) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.